மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அம்மையார் அவர்களுடைய அனுபவத்தையே அரசாங்கம் ஆதாரமாக எடுத்துக்கொள்ளும். (சிரிப்பு).

Chittar-Pattanamkal Scheme

***251. *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken to maintain continuous supply of water for irrigation at Karungal distributory of Chittar-Pattanamkal Scheme ?**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1971-72-ம் ஆண்டில் கருங்கல் கால்வாயின் கீழ் பாசனம் செய்யப்படும் நிலங்கள் (ஆயக்கட்டு) முழுவதற்கும் முறைப் பங்கீட்டின் மூலம் உரிய நேரத்தில் தேவையான அளவு தண்ணீர் வழங்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : கருங்கல் டிஸ்ட்ரிப்யூட்டரில் ஒழுங்கான முறையில் தண்ணீர் விநியோகம் செய்யாததனால், தேவைக்கு ஏற்ற சுலுயிசஸ் அமைக்கப்படாததால் பயிர்கள் மோசமாக ஆகிவிடுகிறது. பல நிலங்களைப் பயிர் செய்யும் முயற்சியை விவசாயிகள் கைவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறையைத் தீர்க்க தீவிரமான நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கருங்கல், பட்டணங்காலின் ஓர் பிரிவு வாய்க்கால் ஆகும். 4,542 ஏக்கர் பயிரிடுவதற்குத் தேவையான 72 கன அடி—விநாடி அளவு 72 க்யூசக்ஸ் தண்ணீர் செல்வதற்கு ஏற்ற வகையில் இக்கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. பட்டணங்கால் 1971-72-ல் முதன் முறையாகப் பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டு கரிக்கால் வாய்க்காலுக்கும் தண்ணீர் அளிக்கப்பட்டது. இந்த ஆண்டில்தான் முதன் முறையாகத் தண்ணீர் அளிக்கப்பட்டதால் ஆயக்கட்டின் முன்னேற்றம் தாமதமாகியது. 1971-72-ஆம் ஆண்டில் 2,114 ஏக்கருக்குத் தான் பாசன வசதிகள் கொடுக்கப்பட்டன. தேவையான அளவிற்கும் அதிகமான அளவு தண்ணீர் கருங்கல் பிரி வாய்க்காலுக்கு (டிஸ்ட்டிரி-பூட்டரி) அளிக்கப்பட்ட போதிலும் கடைப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு இருந்து வந்தது. இதற்கான காரணங்கள் :—

புதிய ஆயக்கட்டின் வரண்ட நிலங்கள் சரியான பகுதிகளில் இருப்பதாலும் மற்றும் மண்ணின் தன்மை, அதிகமான அளவு நீர் உறிஞ்சக் கூடியதாயிருப்பதாலும், இப்பகுதிகளில் தண்ணீரின் தேவை அதிகமாக இருந்தது. இரண்டு அல்லது மூன்று பருவங்களுக்குத் தகுந்த முறையில் மண்ணைப் பண்படுத்திப் பாசனம் செய்துவந்தால் இக்குறை தீர்ந்து தண்ணீர் வீணாகுதல் குறைந்து, நிலைமை சீர்படும்.

1971-72-ல் கரிங்கால் கால்வாயின் கீழ் பாசனம் செய்யப்பட்ட ஆயக்கட்டு முழுவதற்கும் முறைப் பங்கீட்டின் (டர்ன் சிஸ்டம்) மூலம் இரவிலும் பகலிலும் உரிய நேரத்தில் தேவையான அளவு நீர் வழங்கப்பட்டது.

1972 ஆகஸ்ட் 22]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சாதாரணமாக இந்தக் கால்வா யிலே விளம்பரத்திற்காகத் தண்ணீர் ஒழுங்காக வருகிறது என்று அதிகாரி கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அந்த திட்டப் பகுதியிலே இருந்து வருகின்ற ஒரு நபர் என்ற அளவிலேயும், நாங்கள் எல்லாம் விவசாயிகளாக இருக்கின்றோம் என்ற அளவிலேயும் எங்களுக்குத் தண் ணீர் காலா காலத்தில் கிடைப்பதில்லை. நினைத்தவாறு தண்ணீர் விடு கிறார்கள் என்பது ஒரு குறை. இன்னொரு குறை இந்த வாய்க்கால் ஒழுங்காக அமைக்கப்படவில்லை. எனவே (**Field bothies**) 25 எக்கரா வுக்கு உடையதாக அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தொடர்ந்து குறை சொல்லப் படுவதால், தலைமைப் பொறியாளரை நேரிலேயே போய்ப் பார்த்து, அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க அரசாங்கம் உத்திரவிடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

*252. *Q.*—THIRU J. JAMES: Will the Hon. the **Minister** for Public Works be pleased to state:—

(*a*) whether there was a proposal for the excavation of Thirparappu Right Bank Channel to irrigate the areas up to Chitharal in Kanyakumari district; and

(*b*) if so, why the said schemes was not implemented so far?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இத்திட்டம் சித்தாறு-பட்டணம்கால் பாசனத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எனினும் விரிவான பரிசீலனை செய்த பிறகு இது முற்றிலும் சிக்கனமற்ற பெருஞ் செலவாகக் கூடிய ஒரு திட்ட மென்று தெரியவந்ததால் இது கைவிடப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் திட்டத்தினால் பயன்படக்கூடிய சில பஞ்சாயத்து ஏரியாக்களில் குடி தண்ணீர்கூட கிடைக்காமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆக, இந்தத் திட்டத்தைக் கைவிடுவதற்கு காரணம் ஒரு சிலருடைய—தனி நபர்களுடைய இன்ட்ரஸ்ட் என்று கூறப் படுகிறது. ஆகவே, மக்களின் நலனைக் கருதி, இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை அமுல் நடத்த அரசாங்கம் முன் வருமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Collector of Kanyakumari had reported that the field verification by the localisation staff of the lands likely to be benefited by the extension proposal indicated that the ayacut localised by the Public Works